## கே.எம்.சி.ஹெச்.மருத்துவமனையில்

# கர்ப்பப்பை வாய் புற்றுநோய் பரிசோதனை முகாம் துவங்கியது

## சிறப்பு கட்டணம் ரூ.300 மட்டுமே வரும் 31ம் தேதி வரை நடக்கிறது

**கோவை, ஜன. 11:** கே.எம்.சி.ஹெச். மருத்துவமனை மகளிர் புற்றுநோய் சிகிச்சை நிபுணர் டாக்டர் அன்புக்கனி சுப்பையன் கூறியதாவது:

2018ம் ஆண்டில் 96,922 பெண்கள் கர்ப்பப்பை வாய் புற்றுநோயால் பாதிக்கப்பட்டார்கள். ஆண்டுதோறும் 60 ஆயிரம் பெண்கள் சிகிச்சை பலனின்றி இறக்கிறார்கள். கர்ப்பப்பை வாய் புற்றுநோய் எச்பிவி எனும் கிருமியால் ஏற்படுகிறது. பெண்கள் யாருக்கு வேண்டுமானாலும் உடலுறவினால் இக்கிருமி பாதிக்கும் வாய்ப்பு உள்ளது. நோய் எதிர்ப்புத்திறன் குறைந்தவர்களுக்கு புற்றுநோயாக மாறும் வாய்ப்பு அதிகமாக உள்ளது.

இத்தகைய கிருமி பாதிக்கும் பொழுது அதற்கான அறிகுறிகள் எதுவும் முதலில் தெரியாது. புற்றுநோயாக உருவான பின்னர் தான் சில அறிகுறிகள் தெரியும். ஒழுங்கற்ற அல்லது அதிகமான மாதவிடாய் போக்கு, தாம்பத்ய உறவுக்கு பின் இரத்தப்போக்கு, மாதவிடாய் நின்ற பிறகு இரத்தப்போக்கு, பிறப்புறுப்பில் துர்நாற்றத்துடன் திரவம் அல்லது வெள்ளைப்படுதல், காரணம் தெரியாத எடை இழப்பு, காரணம் தெரியாத பசியின்மை, அடிவயிற்றில் தொடர்ந்து வலி, மாதவிடாய் காலங்களுக்கு இடையே தொடர்ந்து இரத்தப்போக்கு இத்தகைய அறிகுறிகளில் ஏதேனும் ஒன்று தென்பட்டால் உடனடியாக மருத்துவ பரிசோதனை மேற்கொள்வது மிகவும் அவசியம்.



▶ டாக்டர் அன்புக்கனி சுப்பையன்

கர்ப்பப்பை வாய் புற்று நோய் பாதிப்பு 4 நிலைகளை கொண்டது. முதல் நிலை புற்றுநோயை அறுவை சிகிச்சை செய்வதின் மூலம் குணப்படுத்தலாம். இதர 2 முதல் 4 நிலையில் கண்டுபிடிக்கப்படும் புற்றுநோய்க்கு 'ரேடியேசன் தெரபி' மற்றும் 'கீமோ தெரபி' மூலம் சிகிச்சை அளிக்கப்படுகிறது. இத்தகைய சிகிச்சை மேற்கொள்ளாவிட்டால் சிறுநீரகம் செயல் இழக்கும் அல்லது அதிக ரத்தப்போக்கு ஏற்பட்டு மரணம் ஏற்படலாம்.

**புற்றுநோய் தடுக்க, குணப்படுத்த...** எச்பிவி கிருமி தொற்றாமல் தடுக்க தடுப்பூசி உள்ளது. 9 முதல் 26 வயதிற்குள்ளான பெண்கள் எச்பிவி தடுப்பூசி போட்டுக் கொள்ளலாம். கர்ப்பப்பை வாயில் ஏற்பட்டுள்ள எச்பிவி தொற்றை பாப்ஸ்மியர் பரிசோதனை மூலம் கண்டுபிடித்துவிடலாம். தகுந்த சிகிச்சை மூலம் குணப்படுத்திவிடலாம்.

**சிறப்பு முகாம் :** கே.எம்.சி.ஹெச்.மருத்துவமனையில் கர்ப்பப்பை வாய் புற்றுநோய் பரிசோதனை சிறப்பு முகாம் கடந்த 2ம் தேதி துவங்கியது. வரும் 31ம் தேதி வரை நடக்கிறது. இந்நாட்களில் தினசரி காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை சிறப்பு முகாம் நடக்கிறது. பாப்ஸ்மியர் பரிசோதனை மற்றும் ஆலோசனைக்கு கட்டணம் ரூ.300 மட்டுமே!

**மேலும் விபரங்களுக்கு, மகளிர் புற்றுநோய் சிகிச்சை நிபுணர் டாக்டர் அன்புக்கனி சுப்பையன், கே.எம்.சி.ஹெச்.மருத்துவமனை, அவினாசி ரோடு, கோயம்புத்தூர், மொபைல் : 73393 33485 எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.**

KMCH

**கோவை மெடிக்கல் சென்டர் & ஹாஸ்பிட்டல்**

Accredited by NABH

99, அவிநாசி ரோடு, கோயமுத்தூர் - 641 014 | Ph: +91 422 4323 800 - 802, 3083 800. | www.kmchhospitals.com